பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 30 திங்கட்கிழமை 13.05.2024 கதிர் 187

## பதவி விலகினார் மைத்திரி சு.க தவிசாளராக விஜயதாச

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்தும் செயற்குழு உறுப்பினர் பதவியில் இருந்தும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விலகியுள்ளார்.

நேற்று நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச புதிய தவிசாளராக ஏகமனதாக நியமிக்கப்பட்டார். ☞ 2

## ரணிலின் வெற்றியை தடுக்கவே முடியாதாம்

ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன்திஸாநாயக்கதெரிவித்துள்ளார்.

பலாங்கொடையில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாகச் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

### 'அரகலய' மக்கள் எழுச்சியின்போது

## கோட்டா கொல்லப்படுவதை தடுக்கவே அவர் தப்பியோடுவதற்கு உதவினேன்

### மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

'அரகலய' மக்கள் எழுச்சியின்போதுமுன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தாக்கப்பட்டு கொலை செய்யப்படும் ஆபத்து நிலவியதால் அவர் இலங்கையிலிருந்து வெளியேற உதவினேன் என்று மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முஹமட் நசீட் தெரிவித்தார் ஆங்கில ☞ 8

## நாடாளுமன்றை கலைத்தால் அரசியல் ஆட்டம் காணும்

### கடன் மறுசீரமைப்புக்கும் பாதிப்பு என்கிறார் சம்பிக்க

நாடாளுமன்றத்தை கலைத்தால் நாட்டில் ஸ்திரமற்றஅரசியல்நிலைமை தோற்றம்பெறும். அதுகடன் மறுசீரமைப்புக்கு தாக்கம் செலுத்தும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மஹரகமவில் ☞ 8

## இது ரகசியம் அல்ல!

சோதிடம் சோதிடம் என்று திரிந்த இலங்கையின் தலைவர்கள் அழிந்த வரலாறுநிறையஉண்டு. இருந்தாலும் இன்னும் அவர்கள் திருந்துவதாக இல்லை. தனது பதவிக் காலம் முடிவதற்கு கிட்டத்தட்ட ஓராண்டு இருக்கும்போதே, சாதகத்தையும் சோதிடத்தையும் நம்பி ஜனாதிபதித் தேர்தலை நடத்திய மகிந்த ராஜபக்ச 2015இல் மைத்திரியிடம் தோல்வி அடைந்தார். சோதிடம் பார்த்துப் பார்த்துப் பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ச கடைசியில் மக்களால் விரட்டி அடிக்கப்பட்டார்.

இவையெல்லாம்பழங்கதைகள். இப்போதுபுதுக்கதையும்ஒன்றுண்டு. சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாச ராஜபக்ச வருவதற்கு முண்டியடித்துக் கொண்டிருக்கிறார். நேற்றும் சுதந்திரக் கட்சியின் தவிசாளராக அவரை மைத்திரி அணியினர் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். ஏற்கனவே தமது அணியின் ஜனாதிபதி வேட்பாளர் அவர்தான் என்றும் அறிவித்துள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்தும் செயற்குழு ☞ 2

## மட்டுப்படுத்தப்பட்ட வாகன இறக்குமதி

### ஆளும் தரப்பு ஆலோசிக்கிறது

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வாகன இறக்குமதியைச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதாரச் செயற்றிட்டங்களின் அடிப்படையில் முழுமையான நிதி முகாமைக்கான இயலுமை இல்லை.

ஸ்திரத்தன்மையை நோக்கிய பயணத்தில் 18 மாதங்கள் பூர்த்தியானதொரு நாடாகவே உள்ளோம். தற்போதைய நிலையில் எதிர்க்கட்சியிடமிருந்து யோசனையொன்று முன்வைக்கப் பட்டுள்ளது.

அதுபணம்அச்சிடுவதுபற்றியதாகும். நாம் பணம் அச்சிடும் விடயத்தினை மட்டுப்படுத்தியுள்ளோம். அதனை உடனடியாக ஆரம்பிக்க முடியாது. அதேபோன்றுதான் வாகன இறக்குமதி விடயத்திலும் நாம் நடவடிக்கைளை எடுத்திருந்தோம். அந்த ☞ 8

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் சர்வதேச மன்னிப்புச் சபை தலைவர்

### மே 18 நிகழ்வில் பங்கெடுப்பார்

இலங்கைக்கு வருகை தரவுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின்செயலாளர்நாயகம் அக்னெஸ்கலமார்ட்மே18முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார்.

போரின்15வருடப்பூர்த்தியையொட்டிலண்டனைத்தளமாகக் கொண்டு இயங்கிவரும் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ☞ 2

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்றுப் பெரும் எழுச்சியுடன் தொடக்கம்



முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 15ஆவது ஆண்டுநினைவேந்தல் வாரம் நேற்று பெரும் எழுச்சியுடன் தொடங்கியது. பல இடங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது. முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திகளும் புறப்பட்டன.

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின்15வது ஆண்டு நினைவேந்தல்வாரத்தின் முதலாவது நாளில் முள்ளிவாய்க்காலில் உயிர் இழந்த உறவுகளின் ஆத்மா சாந்தியடைய கம்பர்மலை வன்னிச்சிஅம்மன் ☞ 2

## டயானா மீதான நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவிற்கு விதிக்கப்பட்டவெளிநாட்டு பயணத்தடை மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தீர்மானம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய மேலதிகநடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபரிடம்ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

டயானா கமகே மீது விதிக்கப்பட்டவெளிநாட்டு பயணத்தடை காரணமாக அவர் நாட்டை விட்டுவெளியேறஅனுமதிக்கப்படவில்லை எனவும், உச்ச நீதிமன்றத்தின்தீர்மானத்தின்படி அவர் நாட்டில் தங்குவதற்கு விசா பெற வேண்டும் எனவும் அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இது ஒரு தனித்துவமான மற்றும் கேள்விக்குரிய நிலை என்பதால், இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்டமா ☞ 2

## ரஷ்யா - உக்ரேன் செல்லவேண்டாம்

### அயலுறவு இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

வெளிநாட்டுவேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் ஊடாக ரஷ்யா, உக்ரேனுக்குச் செல்ல வேண்டாம் என்றுஅயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

முகவர் நிறுவனங்கள்போலியவிளம்பரங்களைச் செய்து ஆட்கடத்தல் செய்துவருகின்றன. அதேநேரம் இலங்கையின் முன்னாள் படையினர் வெளிநாடுகளுக்குச் சென்று போரில் ஈடுபடுவதற்கு எந்தவிதமான சட்ட அங்கீகாரமும் இல்லை.

அரசு என்ற அடிப்படையில் தீர்மானங்களை எடுத்து பிறிதொரு நாட்டின் படைகளுடன் பணியில் ஈடுபடுவதைத் தவிர வேறெந்த விதத்திலும் வேறொரு நாட்டுக்குச் சென்று படைத்துறை நடவடிக்கையில் ☞ 8

## ரஷ்யா - உக்ரேன் போரில் 14 படையினர் உயிரிழப்பு

### 134 பேர் அங்கு கடத்தப்பட்டதாக முறைப்பாடு

ரஷ்யா - உக்ரேன் போரில் ஈடுபட்டு உயிரிழந்த இலங்கைப் படையினரின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

ஓய்வு பெற்ற படையினர் ரஷ்யா மற்றும் உக்ரேனுக்கு சட்டவிரோதமாக அனுப்பப்பட்டமை தொடர்பில் 134 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மே 9 முதல் நேற்று இரவு 10 மணி வரை இந்த முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. முன்னாள்படையினரை ரஷ்யா மற்றும் உக்ரேனுக்குக் கடத்தியவர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சட்டவிரோத மனித கடத்தல் மோசடி தொடர்பானதகவல்களை தெரிவிக்க ☞ 2

## இந்திய பயணிகள் கப்பல் சேவையின் திகதி மாற்றம்

இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கும் இடையிலான இன்றுமீண்டும் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்த பயணிகள் கப்பல் சேவையை பிற்போடப்பட்டுள்ளது. மே17 சேவை தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'இந்த்சிறீ' நிறுவனத்தால் நடத்தப் படவுள்ள இந்தக் கப்பல் சேவை சட்ட ரீதியான அனுமதிகளில் ஏற்பட்ட தாமத்தால் இன்று ☞ 2

## அரச ஊழியர் சம்பளம் அடுத்த ஆண்டு அதிகரிக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி

2025ஆம்ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3 சதவீதமா உயரும் என எதிர்பார்ப்பதாகவும் அதற்கமைய அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முற்பகல் நடைபெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு ☞ 2

## இனி இது .....

உறுப்பினர் பதவியில் இருந்தும் முள்ளால் ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன விலகிக்கொண்டு, அந்த இடத்திற்கு விஜயதாசவை நியமித்துள்ளனர். சுதந்திரக்கட்சியின் தலைவராகச் செயற்பட இந்த இருவருக்கும் ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனாலேயே இப்போது தவிசாளராக விஜயதாச நியமிக்கப்பட்டுள்ளார்.

மறுபுறத்தில் சந்திரிகா அம்மையார் தலைமையிலான அணியினர் அமைச்சர் நிமல்சிறீபால டிசில்வாவை கட்சியின் தலைவராக ஏற்கனவே தேர்ந்தெடுத்துள்ளனர். கிட்டத்தட்ட கட்சியைத் தம்வசப்படுத்தியுள்ள அவர்கள் கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டுவதற்கான ஒழுங்குகளையும் செய்து வருகின்றனர்.

இத்தனை களேபரத்துக்கு மத்தியிலும், பெரமுனவைச் சேர்ந்தவரான விஜயதாச சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏற்று, கட்சியை மீட்டு மீள் எழுச்சியடைய வைத்தேதீருவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதற்கு என்ன காரணம் என்று விசாரித்தேன். பதிலைக் கேட்டு அதிர்ந்துவிட்டேன்.

விஜயதாசவினதும் அவரது பேரனினதும் சாதகங்களின்படி விஜயதாசவிற்கு இப்போது ராஜயோகம் இருக்கின்றது என்று சோதிடர்கள் சொல்லியிருக்கிறார்களாம். அதனால்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் அவர் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றார். ஜனாதிபதியா அமரக்கூடிய ராஜயோகம் சாதகத்தில் இருக்கும்போதே பதவியைப் பிடித்துவிட அவரது குடும்பத்தினரும் துடியாகத் துடிக்கின்றனராம்.

அதற்காக, அண்மையில் விஜயதாசவின் வீட்டில் ஒரு யாகம் நடத்தப்பட்டிருக்கின்றது. பௌத்த மற்றும் இந்து முறைகளில் ஒரே நேரத்தில் இந்த சிறப்பு வழிபாட்டுப் பூசை இடம்பெற்றுள்ளது. ஒரு புறத்தில் பிக்குகள் இருந்து பிரித் ஓத, மறுபுறத்தில் அந்தணர்கள் இருந்து யாகம் வளர்த்து மந்திரம் ஓத என்று விஜயதாசவின் ஜனாதிபதிப் பயணத்துக்கான பிள்ளையார் சுழி மிகக் கோலாகலமாக இடம்பெற்றுள்ளது. அதனால்தானோ என்னவோ நீதிமன்றம் என்ன தடைகளை விதித்தாலும் அவற்றையெல்லாம் வென்று சு.கா. சார்பில் தேர்தலில் நின்று ஜனாதிபதியாகியே தீருவேன் என்கிற வெறியோடு இருக்கிறார் விஜயதாச.

மகிந்த, கோட்டா மாதிரி இவரையும் சோதிடம் கவிழ்த்துக் கொட்டாத வரைக்கும் எல்லாம் மகிழ்ச்சிதான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முள்ளிவாய்க்கால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்னெஸ் கலமார்ட் எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கைக்கு வரவுள்ளார்.

அன்றைய தினம் சர்வதேச மன்னிப்புச் சபையின் கொழும்பு அலுவலக செயற்பாட்டாளர்களைச் சந்தித்து உரையாடவுள்ள அவர் மறுதினமான வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்காலுக்கு செல்லவுள்ளார்.

அங்கு முக்கிய சந்திப்புக்களை நடத்துவதற்கு உத்தேசித்திருக்கும் அக்னெஸ் கலமார்ட், போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் சனிக்கிழமை நடைபெறவுள்ள மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மே 20 கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்திக்கவுள்ள அவர், நாட்டின் சமகால மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான தனது அவதானிப்புக்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

"சில சட்டரீதியான அனுமதிகள் காரணமாகவும், தாமதமான கப்பலின் வருகையினாலும் எமது திட்டமிட்ட நாகை காங்கேசன் பயணிகள் கப்பல் சேவையினை மே 13 முதல் மே 16 வரை இயக்கமுடியவில்லை. சேவையினை மே 17 இல் இருந்து இயக்குவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்'' என்று 'இந்த்சிறீ' கப்பல் நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இன்று முதல் மே 16 வரை பயணத்திற்கான பதிவுகளைச் செய்த பயணிகளை மே 17 சேவைக்கு மாற்றியுள்ளோம். பதிவு செய்த பயணிகள் மே 17 அன்று அல்லது அதற்குப் பின்னர் அவர்கள் விரும்பிய திகதிகளில் பயணிக்கலாம், அல்லது செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளப்பெற விரும்பினால், customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம் என்றும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## பதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் செயலாளராக சட்டத்தரணி கீர்த்தி உடவத்த நியமிக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணியினரின் நிறைவேற்றுக்குழு கூட்டம் நேற்று நடை பெற்றது. இதன்போதே இந்த மாற்றங்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சு அவசர 0112 441 146 என்ற தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் ரஷ்ய - உக்ரேன் போரில் பங்கேற்ற இலங்கை பாதுகாப்பு படைகளை சேர்ந்த பலர் உயிரிழந்துள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு சபையில் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சாட்சியமளித்த ஓய்வுப்பெற்ற இராணுவ அதிகாரி, ரஷ்ய-உக்ரைன் போரில் பங்கேற்ற பின்னர் இலங்கைக்குத் தப்பித்து வந்தவர்.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோவிலில் பூசை வழிபாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களும் வடமாகாணசபை உறுப்பினர் முன்னாள் சுகிர்தன் மேஜர் பண்டிதரின் தாயாரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி இளைஞர் அணி செயலாளர் தயாபரனும் ஈடுபட்டனர்.

அத்தோடு கம்பர்மலை சந்தியில் பாரதி இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கஞ்சி வழங்கும் நிகழ்விலும் கலந்து கொண்டிருந்தனர். நெல்லியடி பஸ் நிலையத்தில் முள்ளிவாக்கால் கஞ்சி வழங்கப்பட்டது. சுமந்திரன், சுகிர்தன் ஆகியோர் அங்கு முள்ளவாய்க்கால் கஞ்சியை மக்களுக்குப் பரிமாறினர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும், முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனியும் இன்று காலை யாழ். உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத் தூபியில் முன்னெடுக்கப்பட்டது.

காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலசந்திரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதன்போது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவேந்தி பொதுச்சுடரை முன்னாள் போராளியும் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளருமான விஜயன் ஏற்றி வைத்தார். தொடர்ச்சியாக ஈகச் சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சியும் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழினப் படுகொலையை அடையாளப்படுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி யாழ். நகரிலிருந்து ஆரம்பமானது. இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டதுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் உயிழந்தவர்களுக்கு யாழ். தீவகத்திலும் நேற்று நினைவேந்தல் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நாளான இன்று தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் வேலணை வங்களாவடியில் அமைந்துள்ள நினைவுத்தூபில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது

இதன் போது இறுதிப் போரின் போது உயிரிழந்தவர்களுக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

**வவுனியாவில்**

முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முள்ளிவாய்க்கால் கஞ்சி நகரசபை பொங்கு தமிழ் நினைவு தூபி முன்பாக நேற்று வழங்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் போது மக்கள் முள்ளி வாய்கால் கஞ்சியினை உணவாக உட்கொண்டே உயிர்பிழைத்தனர். அதனை நினைவு கூர்ந்து அடுத்த தலைமுறைக்கு வரலாற்றை கடத்தும் நோக்குடன் இவ்வாறு கஞ்சி வழங்கப்பட்டது.

வீதியால் சென்ற பலரும் அதனை வாங்கி பருகிச் சென்றனர்.

## டயானா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபரிடம் அமைச்சு ஆலோசனை கேட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் டயானாவின் பிரித்தானிய குடியுரிமையைக் காரணம் காட்டி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க சட்டரீதியாகத் தகுதியற்றவர் என உச்சநீதிமன்றம் மே 8 அறிவித்ததை அடுத்து, மறுதினமே கொழும்பு பிரதான நீதிவான் டயானா வெளிநாடு செல்ல தடை விதித்து உத்தரவு பிறப்பித்தார்.

## அரச ஊழியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

தாதியர் சேவையை உருவாக்கிய புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறோம். எமது வணக்கத்திற்குரிய முருத்தொடுவே ஆனந்த தேரரின் பெருமுயற்சியின் விளைவாக இந்தப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த பணியை வெற்றிகரமாக முடித்துள்ளோம். இப்பல்கலைக்கழகம் தற்போதுள்ள கட்டிடத்தில் ஆரம்பித்து பின்னர் மேம்படுத்தப்படும்.

எமது வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் வாழ்க்கை வரலாற்றின் முக்கிய அங்கமாக இப்பல்கலைக்கழகம் திகழ்கிறது. தாதியர் சேவை மட்டுமின்றி, இந்தப் பல்கலைக் கழகத்தில் சர்வதேச மொழிகளையும் கற்பிக்க வேண்டும். ஆங்கிலம், ஜெர்மன், ஜப்பான், கொரியன், சீனா உள்ளிட்ட அனைத்து மொழி அறிவும் இங்கு வழங்கப்பட வேண்டும். இந்த அறிவைப் பெற்ற பிறகு, தாதியர்கள் வெளிநாடுகளில் சேவை வாய்ப்புகளைப் பெறலாம். குறிப்பாக இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கையில் இத்தகைய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாவது அரச ஊழியர்களுக்கு முடிந்த அளவு சலுகைகளை வழங்கியுள்ளோம். அடுத்த ஆண்டு சம்பளத்தை அதிகரிப்பது குறித்தும் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் நாங்கள் மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டோம். இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டின் கடைசி இரண்டு காலாண்டுகளில் தான் தொடங்கியது. 2020ல் இருந்து மூன்றரை வருடங்கள் இந்த நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படவில்லை. பொருளாதார நெருக்கடி மற்றும் கோவிட் தொற்றுநோயால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

மேலும் நாட்டில் போசாக்குக் குறைபாடு அதிகரிப்பது ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு என்பன சில குழந்தைகளின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. இந்த நிலை எதிர்காலத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். எனவே, இந்நிலையைக் கட்டுப்படுத்த நிதி ஒதுக்க வேண்டியதாயிற்று. அதற்காக உலக வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமுர்தியை விட மூன்று மடங்கு நிவாரணத்தை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தோம். மேலும், பயனாளிகளின் எண்ணிக்கை 18 இலட்சத்தில் இருந்து 24 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு ஊழியர்களின் கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக தனியார் துறையிலும் தோட்டத் துறையிலும் சம்பளத்தை உயர்த்துவதற்கான சமிக்ஞை கிடைத்துள்ளது.

கடந்த சிறுபோகத்தில் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றோம். கடந்த சிங்கள தமிழ் புத்தாண்டு காலத்தை போன்று இந்த வெசாக் பண்டிகையிலும் அந்தத் தொகையானது சமூக பொருளாதாரத்தில் இணைக்கப்படும். இந்நிலையில் அடுத்த ஆண்டு 3ஆ பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என நம்புகிறோம். அதன் போது மீண்டும் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் கவனம் செலுத்தியுள்ளோம்.

இது தொடர்பில் தெளிவுடன் செயற்படும் தாதியர் சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேன். அடுத்த ஆண்டு, நாட்டில் பொருளாதாரம் மேலும் முன்னேற்றமடையும். அந்த பொருளாதாரம் வளர்ச்சியை நாம் ஏற்படுத்தாவிட்டால், எம்மால் இந்த இலக்குகளை அடைவது கடினம்.

தற்பொழுது பணத்தை அச்சிட முடியாது. பணத்தை அச்சிட மாட்டோம் என்று சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். அப்படியானால் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதுதான் நமக்கு இருக்கும் ஒரே வழி. எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் தற்போது பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்து வருகின்றோம். அடுத்ததாக தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். அதன்படி, இந்த ஆண்டு வங்குரோத்து நிலையில் இருந்து முழுமையாக விடுபடுவோம். ஆனால் இந்தப் பொருளாதாரப் பிரச்சினை இத்துடன் முடிவடையாது. கடன் தள்ளுபடி செய்தாலும் மிகுதியை மீளச் செலுத்த வேண்டும்.

எனவே, நமது பொருளாதாரத்தை மாற்றுவதற்காக உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு பதிலாக, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு நாம் செல்ல வேண்டும். அந்த நிபந்தனைகளுக்கு நாங்கள் சம்மதித்துள்ளோம். அதிலிருந்து நாம் விலகிச் செல்ல முடியாது. அதிலிருந்து விலகினால், இந்த சலுகைகளை இழக்க நேரிடும். எனவே இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நாம் எப்போதும் வரவு செலவுத்திட்ட உபரியை பராமரிக்க வேண்டும். இன்றேல் கடனை மீளச் செலுத்த முடியாது. இந்த அனைத்து முடிவுகளையும் நாட்டுக்காக எடுத்தோம் என்றே கூற வேண்டும். இப்போது நாம் ஏற்றுமதி பொருளாதாரத்துடன் வேகமாக செல்ல வேண்டும். இதற்கான சில சட்டங்களை தயாரித்துள்ளோம். இதில் சில சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மற்றவை இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளன.

இவற்றில் முதலாவதாக மத்திய வங்கிச் சட்டத்தை நிறைவேற்றினோம். பணத்தை அச்சிடுவதையும், அரச வங்கிகளில் கடன் பெறுவதையும் இந்தச் சட்டம் தடைசெய்வதோடு அதன் மூலம் மத்திய வங்கிக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டது. மேலும், 03 சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரச கடன் முகாமைத்துவச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாம் கடன் வாங்குவதற்கு ஒரு எல்லை உண்டு. அப்படியானால், பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன்களைப் பெறுவதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் அந்தச் சட்டத்தின்படி செயல்பட வேண்டும்.

மேலும், அரச நிதிச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை வரை, குசு இன் படி பணம் கட்டுப்படுத்தப்பட்டது. சட்டத்தின் மூலம் பணத்தை கட்டுப்படுத்த நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கப் பணப்புழக்கம், வருவாய் சேகரிப்பு மற்றும் பண விநியோகம் ஆகியவை எதிர்காலத்தில் இந்த புதிய சட்டத்தின்படி இருக்கும். இந்த புதிய சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

பாராளுமன்றத்தின் வரவு செலவுத்திட்ட அலுவலகத்தை நாங்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டோம். திறைசேரிக்கு மேலதிகமாக, பாராளுமன்றத்திற்கு சுயாதீன அறிக்கைகளை வழங்குவதற்கு ஒரு நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. அதன்படி, அந்த நிறுவனங்கள் இந்த இரண்டு சட்டங்களின் கீழ் செயல்படுகின்றன.

பொருளாதார பரிமாற்ற சட்டத்தையும் நாங்கள் முன்வைக்கிறோம். இந்த நாட்டின் பொருளாதாரம் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட புதிய பொருளாதாரமாக மாற்றப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நாடுகளுடன் ஒப்புக் கொள்ளப்பட்ட அனைத்து

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர்
Kalaikkathir

# போலி தமிழ்த் தேசிய மாயையிலிருந்து வெளிச்சத்துக்கு வருகிறார்கள் தமிழர்கள்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்படித் தெரிவிப்பு

பொது வேட்பாளர் விடயம் என்பது தமிழ் மக்களுக்கு பயனற்ற விடயம். அதை முன்னெடுப்பது தோல்வியிலேயே முடியும் என மக்கள் வெளிப்படையாகக் கூறத்தொடங்கியுள்ளதானது தமிழ் மக்கள் தம்மைப் பீடித்திருந்த போலித் தேசியம் என்ற மாயை அரசியலில் இருந்து படிப்படியாக வெளிச்சத்துக்கு வருவதை உணர்த்துகின்றது என்று மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சர் தலைமையில் தென்மராட்சி பிரதேசத்தை உள்ளடக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள் வட்டார செயலாளர்கள் வட்டார நிர்வாக உறுப்பினர்கள் செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு நேற்று சாவகச்சேரியில் நடைபெற்றபோது அவர் இப்படித் தெரிவித்தார் என கட்சியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நடைமுறைச் சாத்தியமான வழிகள் தொடர்பில் எமது கட்சி மட்டுமே தெளிவாக இருக்கின்றது. ஆனால் இவ்விடயத்தில் எமது கட்சியைவிட மக்களும் தெளிவாக இருக்கவேண்டும். குறிப்பாக நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமராச மற்றும் அனுர குமார திசாநாயக்க ஆகிய மூன்று வேட்பாளர்கள் பிரதானமானவர்களாக காணப்படுகின்றார்கள். இந்த மூவரில் ஒருவருடன் கலந்துரையாடி எமது வாக்குகளை உங்களுக்குத் தலராம் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற பேரம்பேசலைச் செய்தால்தான் ஆரோக்கியமான சூழல் உருவாகும்

தற்போதைய நிலையில் ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவதே சரியானதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன். அதனால்தான் எமது கட்சியின் ஆதரவு ரணில் விக்கமசிங்கவுக்குத்தான் என்பதை நாம் எற்கனவே வெளிப்படையாக அறிவித்துவிட்டோம். அதுமட்டுமல்லாது தற்போதைய காலச் சூழலில் தென்னிலங்கையில் போட்டியிடும் ஒரு தரப்பினருடன் இணக்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு ஆதரவு வழங்கி அதன் ஊடாகப் பேரம் பேசும் சக்தியாக நாம் உருவாகும் நிலையை ஏற்படுத்துவதே அவசியம்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தமிழ்த் தரப்பினர் சரியான முறையில் கையாளாத காரணத்தினால்தான் தமிழ் மக்கள் தற்போதைய நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

37 வருடங்களாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத தச் சட்டம், மாகாணசபை முறைமையை ஆரம்பித்ததன் ஊடாகத்தான் தமிழர்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என நான் சொல்லி வருகின்றேன். ஆனாலும் அதனை



"செவிடன் காதில் ஊதிய சங்கு" போல் யாரும் புரிந்துகொண்டிருக்கவில்லை. தற்போது அதுபற்றிப் பலரும் முணு முணுக்கின்றார்கள். இது ஆரோக்கியமானதாக இருந்தாலும். அன்று அதை எதிர்க்கும்போதும், இன்று அதனை ஆதரிக்கும்போதும் உண்மைத் தன்மையுடன் தமிழ் தரப்பினர் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. இதேநேரம் இதய சுத்தியுடன் கூடிய உண்மைத்தன்மையாக முன்வருவார்களேயானால் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

மேலும் புண்ணுக்கு வலியா மருந்துக்கு வலியா எனப் பார்த்தால் கடந்த காலத் தமிழ் அரசியல்வாதிகள் மருந்துக்குத்தான் வலி என்ற நிலையிலிருந்தே அரசியலை முன்னெடுத்திருந்தனர். அது என்ன நிலைமையில் மக்களைக் கொண்டு விட்டுள்ளது என்பதை இன்று உணர முடியும். எனவே புண்ணுக்குத்தான் வலி என்பதையும், இதனை தமிழ் மக்களும் சரிவர உணர்ந்து யார் தமது பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்கின்றார்களோ அவர்களோடு அணிதிரள்வதுதான் சரியானது எனவும் அவர் தெரிவித்தார் - என்றுள்ளது.

# கல்முனை வடக்கு தமிழ் மக்களின் போராட்டத்துக்கு 4000 பேர் பேரணியாக வந்து நேற்று முழு ஆதரவு



( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான நிர்வாக அடக்குமுறைகளைக் கண்டித்துப் பொதுமக்கள் சிவில் அமைப்புக்கள் நடத்தி வரும் போராட்டம் இன்றுடன் ஐம்பது நாட்களை எட்டுகிறது. அதையொட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்டத்திற்கு ஆதரவாக கல்முனை நகரில் பேரணி இடம்பெற்றது.

பேரணியால் நகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பொலிஸார் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தியதுடன் பேரணிக்கும் பாதுகாப்பு வழங்கினர். ஊர்வலத்தில் சுமார் 4000 பேர் வரையானோர் பங்கேற்றனர். இதனால் கல்முனை தமிழர் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தைத் தனித்துச் செயற்பட அனுமதிக்கவேண்டும் என்றும் அதனைத் தரமிறக்கும் முயற்சிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் பிரதேச செயலக முன்றலில் நடைபெற்று வரும் போராட்டம் நேற்று 49ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

அதற்கு ஆதரவாக நடந்த பேரணி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து தரவைப் பிள்ளையார் ஆலயம் வரை சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை அடைந்தது. மிக நீண்ட நேரம் மக்கள் கோஷங்களை எழுப்பியபடியும் பதாதைகளைத் தாங்கியபடியும் பேரணியில் கலந்துகொண்டனர். . சுட்டெரிக்கும் வெயிலுக்கு மத்தியிலும் கொதிக்கும் தார் வீதியில் மக்கள் பேரணியாகச் சென்றார்கள். தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை பதாகைகளாகக் காட்சிப்படுத்தியிருந்தார்கள்.

தமது கோரிக்கைகளையும் பதாதைகளில் எழுதியிருந்தார்கள். பேரணி சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்கு நீண்டது. பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தமது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அங்கு வந்திருந்தமை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியது.

# ஆண்டிமுனை கிராமத்திற்கான நீர் வழங்கல் திட்டம் தொடக்கம்

(எம்.எச்.எம் சியாஜ்,
எம்.யூ.எம்.சனூன்)

உடப்பு ஆண்டிமுனை கிராமத்திற்கான நீர் வழங்கல் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எச்.எம் றியாஸ் தலைமையில் நடைபெற உள்ளது. ஆண்டிமுனை சனத் நிசாந்த பவுண்டேஷன் அமைப்பின் தலைவர் எம்.சஹாதேவனின் வேண்டுகோளின் பேரில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எச்.எம் றியாஸின் மேற்பார்வையின் கீழ் காலஞ்சென்ற முன்னாள் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேராவின் நிதி ஒதுக்கீட்டில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

தொடக்க நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிந்தக மாயாதுன்னே பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். சனத் நிசாந்த பெரேராவின் பாரியாரும் சட்டத்தரணியுமான சாமரி பிரியங்கா திட்டத்தைத் தொடக்கி வைப்பார்.

# 15 வயது சிறுமி கூட்டு வன்புணர்வு பெண் ஒருவர் உட்பட 4 பேர் கைது

வவுனியா நகரையண்டிய தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து 15 வயது சிறுமி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதற்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பெண் ஒருவரும் சம்பவம் தொடர்பில் மூன்றூ ஆண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பகுதியில் வசித்து வந்த 15 வயதுச் சிறுமி தேக்கவத்தையில் உள்ள விடுதிக்கு அழைத்துச் சென்ற இளைஞர் ஒருவர் போதைப் பொருள் கொடுத்து நண்பர்களுடன் சேர்ந்து கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் ஜனவரி மாதம் நடந்துள்ளது.

இந்த மாதம் சிறுமியின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து பெற்றோர் சிறுமியிடம் விசாரித்ததில் சிறுமி தான் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட விடயத்தைத் தெரிவித்துள்ளார். இதனையடுத்து சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அலுவலர்களை அணுகிய சிறுமியின் பெற்றோர் அவர்களின் வழிப்படுத்தலில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த வவுனியா பொலிசார் கூட்டுவன்புணர்வுக்கு உடந்தையாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் சிறுமியின் உறவினரான 20 வயது பெண் ஒருவரையும், வன்புணர்வில் ஈடுபட்ட சந்தேகத்தில் வவுனியா நகரப் பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் கடமையாற்றும் இளைஞன் உட்பட மூன்று இளைஞர்களையும் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நான்கு பேரும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறுமியிடம் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நினைவேந்தல் கட்டமைப்பின் அவசியம்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்றும் தொடங்கியிருக்கின்றது. அதனையொட்டி நினைவு ஊர்த்திப் பவனியும் தொடங்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு பல இடங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி ஆக்கிப் பகிரப்பட்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் பெருந்துயரின் குறியீடாக இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி கடந்த சில வருடங்களாகப் பகிரப்பட்டுவருகின்றது.'அரகலய'மக்கள்எழுச்சியின்போது கொழும்பில் அவர்களுக்கும் பகிரப்படும் அளவிற்கு அது தனது கரங்களை நீட்டியிருந்தது. அதாவது தமிழர்கள் மத்தியில் மட்டுமல்லாமல் சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழர்கள் பட்ட துன்பத்தை, துயரத்தை, போர்க் குற்றங்களைக் கொண்டு செல்லும் குறியீடாக முள்ளிவாய்க்கால் கஞ்சியின் பகிர்வு அமைந்திருந்தது.

முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினப்படுகொலை உச்சந்தொட்டு இவ்வருடம் 15ஆவது ஆண்டு நிறைவுறுகின்றது. அடக்குமுறைக்கெதிரான ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் உலக நாடுகள் பலவற்றினதும் ஆதரவுடன் ஒடுக்கப்பட்ட பின்னர், ஒடுக்கமுறைகள் தொடரும் 15 ஆண்டுகளின் நிறைவாகவும் இது பார்க்கப்படுகின்றது.

ஈழத் தமிழினத்தின் நீதி வேண்டிய பயணமும், தொடர் போராட்ட முன்னெடுப்புகளும் நீதியின் கதவை எப்போதுமே தட்டிக்கொண்டேயிருக்கப்போகிறது.

ஈழத்தமிழினம் நினைவுகளை மட்டும் ஆயுதமாக்கவில்லை.விடுதலைக்கனவினைநம்பிக்கை இயங்கியலாக்கி இலக்கு நோக்கிப் பயணிக்கின்றது. நீதிக்கான தொடர் தேடலும் ஓர் ஆயுதமே என்பதை ஆர்மேனியா தொடக்கம் பலஸ்தீனம் வரைக்கும் விடுதலைப் போராட்டங்களின் வரலாறு எமக்கு சொல்லித் தருகின்றது.

முள்ளிவாய்க்கால் ஒரு பேரவலத்தின் குறியீடு மட்டுமல்ல.அடக்குமுறை எதிர்ப்பின் நம்பிக்கையின் குறியீடு. இந்த 15ஆவது ஆண்டின் நினைவேந்தல் ஒழுங்குமுறைகளை தயார் செய்யும் ஈழத்தமிழினம், முள்ளிவாய்க்கால் தரும் விடுதலை நம்பிகையின் நினைவுகளை மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய கால கட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

விடுதலை நம்பிக்கையின் நினைவுகளை மக்கள் மயப்படுத்துவதென்பது, ஓர் அமைப்பின் நிகழ்ச்சித்திட்டமல்ல. ஒவ்வொரு ஈழத்தமிழனதும் வரலாற்றுக்கடமையும் உரிமையும் கூடவாகும்.

இதைநினைவில்கொண்டு,அனைவரும்பேதங்களைத் துறந்து, சுயலாப , சுயவிளம்பரப்படுத்தல்களைக் கடந்து எமது பொது நிகழ்ச்சி நிரலில் ஒன்றுபட்டு தமிழர்களாக இந் நினைவேந்தலில் ஒன்றிணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு அழைப்பு விடுத்துள்ளது.

இனப்படுகொலையின் நினைவாகவும் அதனை இளைய தலைமுறையினருக்குக் கடத்தும் விதமாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி ஒரு குறியீடாக இந்த நினைவேந்தல் வாரத்தில் அனைவராலும் பகிரப்பட்டு வருகின்றது. இந்த முயற்சி தொடரவேண்டும். அதேநேரம் முள்ளிவாய்க்கால் என்பது ஒரு நாளிலோ ஒரு வாரத்திலோ நினைவேந்தப்படவேண்டிய ஒன்றல்ல. அது உலகம் முழுவதும் கொண்டு செல்லப்பட்டு அரச ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்ட வடிவமாக நிலைநிறுத்தப்படவேண்டியது. அதனால் முறையான முழுமையான ஒரு நினைவேந்தல் கட்டமைப்பு உருவாக்கப்படுவது அவசியம்; அவசரம். அதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படவேண்டும்.



# ஜார் ஆட்சியை தொடரும் புட்டின்

ஐங்கரன் விக்கினேஸ்வரா




ரஷ்ய ஜனாதிபதியாக 2036 ஆம் ஆண்டு வரை பதவி வகிக்கும் வகையில் ஐந்தாவது முறையாக விளாடிமின் புட்டின் பதவியேற்றுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் 1999 டிசெம்பர் 31 போரிஸ் யெல்ட்சின் (Boris Yeltsin) பதவி விலகியதை அடுத்து பதில் அதிபராகப் பதவிக்கு வந்தவர். பின்னர் 2000 ஆம் ஆண்டிலும், 2004 ஆம் ஆண்டு தேர்தலிலும் வெற்றி பெற்று அரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ரஷ்ய அரசர்களை 'ஜார்' (Tsar) என்றே அழைப்பார்கள். ரஷ்யாவை ஆண்ட மன்னர் மகா பீற்றரை ( King Peter the Great) இன்றும் வியந்து போற்றுபவர் ரஷ்ய அதிபர் புட்டின். இது பரவலாக அறியப்பட்டதுதான். ஆனால் இப்போது மகாபீற்றரைப் போன்றே தாம் செயல்பட்டு வருகின்றார் என்றும் பரவலாக கருத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

சமீப காலமாக ஜார் ஆட்சி வரலாற்றை மேற்கோள் காட்டுவதையே புட்டின் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். தற்போதய ஆட்சியானது, மகா பீற்றரின் பேரரசைக் கட்டியெழுப்பும் திட்டம் என்றும் வெளிப்படையாகத் தெரிவித்து வருகிறார்.

2000ஆம் ஆண்டில் இருந்து 2008ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக புட்டினின் பதவிக் காலம் மே 7, 2008இல் முடிவடைந்ததைத் தொடர்ந்து புதிய அரசுத் தலைவரான டிமித்ரி மெட்வெடெவ் இவரை நாட்டின் பிரதமராக அறிவித்தார். ரஷ்ய அரசமைப்பின்படி ஒருவர் தொடர்ந்து இரண்டு பதவிக் காலங்களுக்கு மேல் பதவியில் நீடிக்க முடியாது. நான்கு ஆண்டுகள் பிரதமராக இருந்த புட்டின் மீண்டும் 2012 மார்ச் 4 இல் இடம்பெற்ற தேர்தலில் மூன்றாம் முறையாக அரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் .

மூன்றாவது பதவிக்காலம் 2012 மே 7 இல் தொடங்கியது. பிறகு 2018ஆம் ஆண்டு தேர்தலில் வென்று தற்போது வரை ஆட்சியைத் தொடர்ந்து வருகிறார்.






### போரிஸ் யெல்ட்சினுடன் – புட்டின் உறவு

ரஷ்யா சோவியத் ஒன்றியமாக இருந்தபோது அதன் உளவு அமைப்பான (முபுடீ) கேஜிபி-இல் புட்டின் பணியாற்றினார். 1991 ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியம் உடைந்ததால், கொர்பசோவ் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார். புதிதாகப் பொறுப்பேற்ற போரிஸ் யெல்ட்சின் உடன் விளாடிமிர் புட்டின் உறவு சரியாக அமையவில்லை. எனவே பணியிலிருந்து விலகி தனது உதவியாளரான மெட்வடேவ் உடன் இணைந்து புதிதாகக் கட்சி ஒன்றைத் துவங்கினர். 'சையூச்னய ரஷ்யா' என்று கட்சிக்கு பெயரிட்டார். 2000ஆம் ஆண்டு இவரது கட்சி ரஷ்யாவில் ஆட்சியைப் பிடித்தது.

2000ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இரண்டு முறை ரஷ்யாவின் அதிபராக இருந்தார். அதற்கு மேல் அந்த பத வியை வசிக்க ரஷ்ய நாடாளும் மன்றமான தூமா (Duma) அரசியல் சாசனப்படி வாய்ப்பிருக்கவில்லை. எனவே 2008 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு மெட்வடேவிற்கு அதிபர் பதவியைக் கொடுத்துவிட்டு பிரதமர் பதவியைப் பிடித்தார். நான்கு ஆண்டுகள் பிரதமராக இருந்த விளாதிமிர் புடின் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் 64 சத வீதத்திற்கு மேலான வாக்குகளைப் பெற்று மூன்றாம் முறையாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.




### பதவியில் நீடிக்க வாக்கெடுப்பு:

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் 2036 ஆம் ஆண்டு வரை பதவி வகிக்கும் வகையில் அரசமைப்பை திருத்த பெரும்பான்மையானோர் ஆதரவு தெரிவித்துள்ளார்கள். தற்போது 71 வயதாகும் புட்டின் அவரது 87 ஆவது வயது வரை ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

அவரது பதவிக் காலத்தை மேலும் இரு முறை அதாவது 2036 ஆம் ஆண்டு வரை 12 ஆண்டுகள் நீட்டிப்பது குறித்து அந்நாட்டு அரசமைப்பில் மாற்றம் செய்ய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# வரிப்பத்தான்சேனையில் மு.க. மத்திய குழு சீரமைப்பு



(நூருல் ஹுதா உமர்)

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின்வரிப்பத்தான்சேனைபிரதேச மத்திய குழு புனரமைப்பதற்கான முன்னேற்பாட்டுக்கூட்டம்சனிக்கிழமை வரிப்பத்தான்சேனை முஸ்லிம் காங்கிரஸ்அமைப்பாளரும்,முன்னாள் இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளர்எம்.ஐ.நைசர்தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் என்.ஆசிக்,அட்டாளைச்சேனைபிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஐ.எல்.நசீர், வரிப்பத்தான்சேனை பிரதேச கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், கொள்கை பரப்புச் செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும்இளைஞர்அமைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இதேபோன்று, சீறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இறக்காமம் பிரதேச மத்திய குழு புனரமைப்பதற்கானமுன்னேற்பாட்டுக் கூட்டம்இறக்காமம்முஸ்லிம்காங்கிரஸ் அமைப்பாளர் எஸ்.எல்.நிசார் ஆசிரியர்தலைமையில்சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், முஸ்லிம் காங்கிரஸ் அரசியல்அதிஉயர்பீடஉறுப்பினருமான ஏ. பீ ரியாஸ், இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எல்.முஸ்மி, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஐ.எல்.நசீர், இறக்காம பிரதேச கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், கொள்கை பரப்புச் செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும்இளைஞர்அமைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

# ஜார் ஆட்சியை...

**ஜார் மன்னரை போன்று புட்டின்:**

ரஷ்ய பேரரசை நிறுவ 1547 இல் இவான்-ஐஏ ஜார் மன்னர் பட்டத்தை ஏற்றுக்கொண்டார். பின்னர் 1721 இல் பீற்றர் - ஐ ரஷ்யாவின் ஜார் மன்னரின் ஆட்சியைப் பொறுப்பெடுத்தார், அவரது காலத்தில் ஒரு மையப்படுத்தப்பட்ட ரஷ்ய அரசு கட்டியெழுப்பப்பட்டது. இந்த காலகட்டத்தில் ரோமானோவ் வம்சங்களின் எழுச்சிகள், போலந்து-லிதுவேனியன், ஸ்வீடன் மற்றும் ஒட்டோமான் பேரரசு உடனான போர்கள் என்பவற்றை பீற்றர் வென்றார்.அதேவேளை சைபீரியாவையும் ரஷ்யா கைப்பற்றியது.

1689 இல் ஆட்சியைப் பிடித்த பீற்றர் தி கிரேட் ஆட்சி ஒரு பெரும் ஐரோப்பிய சக்தியாக மாற்றியது. பெரிய வடக்குப் போரின்போது, அவர் கணிசமான சீர்திருத்தங்களைச் செயல்படுத்தினார். பின்னர் 1721 இல் சுவீடனை வென்ற பிறகு ரஷ்ய சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தி அறிவித்தார்.

இதனாலேயே ரஷ்ய அதிபர் புட்டின் எப்போதும் ஜார் மன்னர் மகா பீற்றரை வியந்து போற்றுபவர். ஆனால் இப்போது மகாபீற்றரைப் போன்றே தானும் செயல்படுகிறார் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

**புட்டின் ரஷ்ய ஜார் மன்னராக**

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு மகா பீற்றர் நடத்திய போர்களுடன் இன்று தாம் நடத்திக் கொண்டிருக்கும் உக்ரேனியப் போரை புட்டின் வெளிப்படையாகவே ஒப்பிடுகிறார். ரஷ்யாவின் கடந்த கால வரலாற்றை மேற்கோள்காட்டுவதையே புட்டின் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். இன்றைய காலகட்டத்துக்கு ஏற்றவாறு அதைப் பொருத்திப் பேசுகிறார்.

மகா பீற்றர் பால்டிக் முதல் கருங்கடல் வரையிலான் நிலத்தை கைப்பற்றி ஆண்டவர். ஆனால் ரஷ்யா தொடங்கிய வடக்குப் பெரும் போர் 21 ஆண்டுகளாக நீடித்திருந்தது. ரஷ்யாவை நவீனப்படுத்துவதற்காக இரகசியமாக ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பயணம் செய்தவர் மகா பீற்றர், செயின்ட் பீற்றர்ஸ்பர்க்கை ரஷ்யாவின் புதிய தலைநகராக அவர் உருவாக்கியபோது ஓர் ஐரோப்பிய நாடுகூட அதை அங்கீகரிக்கவில்லை.

**உக்ரைன் மீதான போர்**

மகா பீற்றர் ஒரு சர்வாதிகாரியாக அறியப்பட்டாலும், மேற்கத்திய சித்தாந்தங்களையும், அறிவியல், பண்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளக்கூடியவர். ஐரோப்பாவின் வாசற்படியாக செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை உருவாக்கினார். ரஷ்யாவை நவீனப்படுத்த ஐரோப்பா முழுவதும் பயணம் மேற்கொண்டிருந்தார்.

ஆனால் புட்டினின் தொடர்ச்சியான ஆட்சியில் மன்னர் பீற்றர் உருவாக்கிய வாசற்படி மெதுவாகத் மூடத் தொடங்கியது. உக்ரேன் மீதான போர் மீதமிருந்ததையும் மூடிவிட்டது என்றே கருதலாம்.

புதிய சிந்தனைகளைத் தேடி மகா பீற்றர் மேற்கொண்டது போன்ற பயணத்தை புட்டின் மேற்கொள்வது இப்போது சாத்தியமில்லை என்றே தெரிகிறது. ஆயினும் வரலாற்றில் தேர்ந்தெடுத்த பகுதியை இலாவகமாக புட்டின் தனக்கு ஏற்றாற்போலப பயன்படுத்துகிறார்.

மேற்கத்திய எதிர்ப்புகளையும் பொருளாதாரத் தடைகளையும் எதிர்கொள்வது என்பதில் ரஷ்யா உறுதியாக உள்ளது. உக்ரேனியப் போர் முடிவுற்றாலும் மீண்டும் அதிபர் தேர்தலில் புட்டின் வெற்றி பெற்று,

2036ஆண்டு வரை ஆளும் வாய்ப்பு உள்ளது. ஏதோ ஓர் வகையில் ரஷ்யாவில் ஜார் ஆட்சியை தொடர புட்டின் முயல்வது தெரிகிறது.

ஜார் மன்னர் மகா பீற்றரை வியந்து போற்றுபவதுடன், அதே வழியில் செல்லும் புட்டினுக்கு வரலாற்றுப் புத்தகங்களிலிருந்து இன்னொரு பக்கம் கிடைக்கலாம்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# திருமணத்திற்கு சென்று திரும்பிய பெண் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

## 3 வயதுச் சிறுமி உட்பட இருவர் காயம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தம்புள்ளை - ஹபரணை வீதியில் திகம்பத்தஹ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். திருமணத்திற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவர்களே விபத்தில் சிக்கினர். மூன்று வயதுச் சிறுமி ஒருத்தி உட்பட இருவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

தம்புள்ளையில் இருந்து ஹபரணை நோக்கி பயணித்த 'கப்' ரக வாகனமொன்று அதே திசையில் பயணித்த காரை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர் திசையில் இருந்து வந்த லொறியுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த 'கப்' வாகனத்தில் பயணித்த பெண் ஹபரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஹபரணை, ஹிரிவடுன்ன பிரதேசத்தில் வசித்து வந்த சந்தியா குமாரி (வயது 44) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அவர் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தார். சம்பவத்தில் மேலும் இருவர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த இருவரில் மூன்று வயதுச் சிறுமியும் அடங்குவார். அவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

# அம்பாறையில் குற்றங்கள் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக கடத்தல்கள், திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

கடந்த மாதத்தைவிட இம்மாதம் பட்டப்பகலில் வீடுகள் உடைத்து திருடப்பட்ட சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் அதிகளவில் கால்நடை கடத்தப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். வீதிகளில் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வீதிச் சோதனைச் சாவடிகளில் கடமையில் இருக்கும் பொலிஸாரும் இராணுவத்தினரும் கைத்தொலைபேசி மோகத்தில் அதற்குள் மூழ்கிக் கிடப்பதால் குற்றச் செயல்களை, குறிப்பாக வீதியூடாக இடம்பெறும் குற்றங்களைத் தடுக்க முடியவில்லை என்றும் மக்கள் குறைப்படுகின்றனர்.

இதை விட வீதிகளில் விதிகளுக்கு மாறாக வாகனங்களை தரித்து வைத்துப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதும் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவற்றைப் பொலிஸார் கண்டுகொள்வதோ முறைப்படுத்துவதோ இல்லை என்றும் அவர்கள் குறைப்படுகின்றனர்.

இதை விட அதிகாலை வேளையில் கல்முனை சாய்ந்தமருது காரைதீவு பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை பகுதிகளில் இருந்து மணல் கடத்தப்படுவதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

# உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களுடன் இம்ரான் எம்.பி.

## திருகோணமலையில் கலந்துரையாடல்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தில் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன கல்வி நிலையத்தில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதாக அங்குள்ள மாணவர் ஒன்றியத்தினால் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகஷூப்புக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்திருந்ததை அடுத்து அவர் அங்கு நேரில் சென்று மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

சனிக்கிழமை கல்வி நிறுவனத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர், மாணவர்கள் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் முகமாக உரிய அதிகாரிகளுக்கு தொலைபேசியில் பேசினார். பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் விரைவாக வழங்குவதற்கும் தன்னாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிலையத்தின் உதவிப் பணிப்பாளர், விரிவுரையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் சதாத் கரீம், முன்னாள் பட்டினம் சூழலும் பிரதேச சபையின் உப தவிசாளர் முகம்மட் நௌபர், நகர சபை வேட்பாளர் சதீஷ், மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அலோசன், மாணவர் ஒன்றியத்தின் நிர்வாகிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

## அரச ஊழியர்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

விதிமுறைகளையும் நாங்கள் சட்டமாக கொண்டு வருகிறோம். இந்த சட்டத்தை நிறைவேற்ற அனைத்து தரப்பினரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் நமது நாட்டின் எதிர்காலம் இந்த சட்டங்களில் தங்கியுள்ளது.

குறிப்பாக இன்று நமது சுகாதாரத் துறைக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. நம் நாட்டில் முதியோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், ஊட்டச்சத்து குறைபாட்டை தடுக்க பாடுபட வேண்டும். அதற்கு வேகமான பொருளாதாரவளர்ச்சியைஏற்படுத்த வேண்டும்.

இந்தநாட்டைமீளக்கட்டியெழுப்ப ஏனைய கட்சிகளை இணைத்து ஆட்சியைஉருவாக்கினோம்.இன்று நாம்அதைநிறைவேற்றியுள்ளோம். இப்போது நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்லும்இந்த03பிரதான சட்டங்கள்முன்வைக்கப்பட்டுஜூன் மாதம்விவாதம்நடத்தப்படும்.இதை அனைவரும்ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.இதற்கான மாற்று வழியை யாரும் முன்வைக்கவில்லை. அப்படி யானால், இந்த புதிய சட்டங்களை அனைவரும் ஏற்றுக்கொண்டு நாட்டை முன்னேற்ற நடவடிக்கை எடுப்போம்" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## நாடாளுமன்றை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும், பொது ஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச வுக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம்பெற்ற பேச்சுக்கள் இணக்கப்பாடற்ற வகையில் நிறைவடைந்துள்ளன. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு பஸில் ராஜபக்ச ஜனாதிபதியிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

ஜனாதிபதி தேர்தலில் களமிறக்குவதற்கு தம்மிடம் வேட்பாளர் இல்லை என்பதையும், அவ்வாறு களமிறக்கினால்படுதோல்வியடைய நேரிடும்என்பதையும்ராஜபக்சக்கள் நன்கு அறிவார்கள். அதனால்தான் இவர்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர்நாடாளுமன்றத்தேர்தலைக் கோருகிறார்கள்.

நாடாளுமன்றத்தின் தற்போதைய பலத்தை கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பொது ஜன பெரமுன தலைமையிலான ஆட்சியை அமைக்க ராஜபக்சக்கள் முயற்சிக்கிறார்கள். ராஜபக்ஷக்களுக்காக நாடாளுமன்றத்தை கலைப்பதா அல்லது கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்து பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதா என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானிக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதுதனதுபிரதானஇலக்கு என்று ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார். வெளிநாட்டு அரசமுறை கடன் மறுசீரமைப்பு எதிர்வரும் ஜூலை மாதம் நிறைவு பெறும் என்று ஆளும் தரப்புக் குறிப்பிடுகிறது.

இவ்வாறான நிலையில் நாடாளுமன்றத்தை கலைத்தால் நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை தோற்றம் பெறும். அது கடன் மறுசீரமைப்புக்கு தாக்கம் செலுத்தும் என்பதை ஜனாதிபதி நன்கறிவார்.

அரசமைப்பின் பிரகாரம், ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதமளவில் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்தினால் முரண்பாடான ஆளும் தரப்பே தோற்றம் பெறும்.

ஜனாதிபதி ஒரு கட்சியையும், ஆளும்தரப்புபிறிதொருகட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தும்போது அரசியல் நெருக்கடிகள் தோற்றம் பெறும். ஆகவே நாட்டில் மீண்டும் அரசியல் நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு ஜனாதிபதி இடமளிக்கமாட்டார்என்றநம்பிக்கை உள்ளது என்றார்.

## கோட்டா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நீண்டகாலமாகபாதுகாக்கப்பட்டு வந்த இலங்கையின் ஜனநாயகம் குறித்த பெருமைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் அரகலயவின்போது இலங்கை ஜனாதிபதியொருவர் அடித்துக்கொல்லப்படுவதை தடுப்பதற்காகவே 2022 ஜூலை 12 கேட்டடாபய தப்பியோடுவதற்கு உதவினேன் என்றார் அவர்.

"வேறுபல நாடுகளை போல இலங்கைஒருபோதும்சதிப்புரட்சியை எதிர்கொண்டதுஇல்லை.உள்நாட்டுப் போரின்போதுகூட இலங்கை தேர்தல்களைத்தவறவிட்டதில்லை.

நாடுஎப்போதும்தேர்தல்மூலமே அதிகார மாற்றத்தில் ஈடுபட்டுள்ளது. இலங்கையில்ஜனாதிபதியொருவர் ஒருபோதும் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்படவில்லை. ஒருபோதும் ஜனாதிபதி ஒருவர் கைதுசெய்யப்பட்டதும் இல்லை.

நான்எனதுஜனாதிபதிகாலத்தில் எதிர்கொண்டது போன்ற நிலைமை இலங்கையில் காணப்பட்டது. கொழும்புஅதனைஎதிர்கொள்வதை நான் விரும்பவில்லை.

தற்போதும் அதே ஆளும் தரப்புத்தான் பதவியில் உள்ளது. ஜனாதிபதி மாத்திரம்தான் வேறு ஒருவராக உள்ளார். 2009 போரை முடிவிற்கு கொண்டுவருவதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளும துப்பாக்கி குண்டுகளும் இன்றும் இருக்கின்றன.

நான் மாலியில் எதிர்கொண்ட விடயங்கள் கொழும்பில் இடம்பெற்றால் தென்னாசியா முழுவதும் அது எதிரொலிக்கும் தென்னாசியா தப்பிபிழைக்காது என நான் கருதினேன்.இலங்கைமக்கள்வேறு ஓர்அரசியல்ஏற்பாட்டைசெய்துகொள்வதற்கு உதவுவதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்துள்ளதாக நான் கருதினேன். எனது மனதில் கோட்டாபய ராஜபக்ச பதவி விலகுவதுவேறுஎதனையும்விடமுக்கியமானதாகக் காணப்பட்டது.

ஜனாதிபதி அந்தக்காலகட்டத்தில் பதவி விலகத் தயராக இருக்கவில்லை. அவர் இன்னமும் வலுவானவராகக் காணப்பட்டார் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் படையினர் காணப்பட்டனர். இராணுவம் தலையிட முடியாது என்று எப்படி நான் எதிர்பார்க்காமல் இருக்க முடியும்?" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். அவர் போட்டியிடுகின்றபோது சஜித் பிரேமதாசவும், அநுரகுமார திசாநாயக்கவும் போட்டியிடுவார்கள். அவர்கள் அவ்வாறு போட்டியிடுகின்றபோது எதிர்க்கட்சிகளுக்கான வாக்குகள் பிளவடையும். இதனால் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதியாகும். அதுமட்டுமன்றி நாட்டு மக்கள் இந்த நாட்டை முன்னோக்கி நகர்த்தவல்ல தலைவரையேவிரும்புகின்றார்கள். அவர்கள்ரணில்விக்கிரமசிங்கவை மீண்டும்ஜனாதிபதியாக்குவதையே தெரிவாகக் கொண்டுள்ளார்கள் என்றார்.

## மட்டுப்படுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் நாம் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் வாகன இறக்கு மதியை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## ரஷ்யா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுபவர்களை மீட்டெடுப்பது மிகவும் கடினமாததொரு பணியாகும்.

தற்போதைய நிலையில் ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் எத்தனைபேர் சென்றிருக்கின்றார்கள், போரில் பங்கேற்றிருக்கின்றார்கள் என்ற முழுமையான தகவல்கள் இல்லை. எமது தூதரகங்கள் அந்த விவரங்களைத் திரட்டுவதற்கு முனைப்புடன் செயற்படுகின்றன.

அவ்வாறு சென்றவர்களின் உறவினர்கள் விவரங்களை வெளிப்படுத்த வேண்டும் என்று நான் பகிரங்கமாகக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கண்ணகை அம்மனுக்கு கிழக்கில் சடங்கு ஆரம்பம்





(வி.ரி.சகாதேவராஜா)

'வைகாசிப்பொங்கல்' என அழைக்கப்படும் கண்ணகை அம்மனின் வைகாசித் திருக்குளிர்த்திச் சடங்கு இன்று பரவலாக ஆரம்பமாகின்றது.

இதனால் கண்ணகை அம்மன் ஆலயங்களுள்ள கிராமங்கள்புதுப்பொலிவுபெற்றுள்ளதுடன்பக்திமயமாகக் காட்சியளிக்கின்றன.

கிழக்கில் குறிப்பாக வந்தாறுமூலை மகிழடித்தீவு முதலைக்குடா மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு செட்டிபாளையம் களுவாஞ்சிக்குடி மகிழூர் கல்முனை காரைதீவு வீரமுனை பட்டிநகர் தம்பிலுவில் போன்ற பல கிராமங்கள் விழாக்கோலம் பூண்டுள்ளன.

வீதியிருமருங்கிலும் அம்மனின் கட்அவுட்டுகள் தோரணம் சோடனைகள் அலங்கார மின்விளக்குகள் மாவிலை குருத்தோலைகள் என அச்சூழல் மனோரம்மியமாகக் காட்சியளிக்கின்றன.

வரலாற்றுபிரசித்திபெற்றகாரைதீவுசிறீகண்ணகை அம்மன்ஆலயத்தின்வருடாந்தவைகாசிச்சடங்குஇன்று மாலை கடல் தீர்த்தம் எடுத்துவந்து கல்யாணக்கால் நடலுடன் ஆரம்பமாகின்றது. பின்புதினமும் ஊர்சுற்றுக் காவியம் பாடுதலும் சடங்குப் பூஜையும் இடம்பெறும்.

மே 20 பொங்கலுக்கு நெல்குற்றும் நிகழ்வும் மே 21 அதிகாலையில் திருக்குளிர்ச்சி பாடுதலும் இடம்பெறும். எட்டாம் சடங்கு மே 27 நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த நடைமுறைகள் ஆலயத்திற்கு ஆலயம் சற்று வேறுபாடுடையதாக இருக்கும்.

# பாடசாலை கட்டடத்திற்கான இரண்டாம் கட்ட நிதி இன்று

(எம்.எச்.எம் சியாஜ், எம்.யூ.எம்.சனூன்)

கொழும்புசயிதாபவுண்டேஷன் அமைப்பின் ஊடாக புத்தளம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆறுபாடசாலைகளில்கட்டடங்களை அமைப்பதற்கான இரண்டாம் கட்ட நிதிக் கையளிப்பு நிகழ்வு இன்றும் இடம்பெறவுள்ளது.

கடையமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி, ஆண்டிமுனை தமிழ் வித்தியாலயம், தாராவில்லு முஸ்லிம்வித்தியாலயம்,பத்துலுஓயா சிங்களபாடசாலை, மாரவிலசிங்கள பாடசாலை மற்றும் ஆராச்சிகட்டுவ சிங்கள பாடசாலை என்பவற்றில் தலா 38 இலட்சம் பெறுமதியான கட்டடம் அமைப்பதற்கான நிதி சயிதா பவுண்டேஷன் அமைப்பின் ஊடாக ஒதுக்கப்பட்டது. முதற்கட்ட நிதியாக ஏற்கனவேதலா15இலட்சம் வழங்கப்பட்டு நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்டிருந்தன.

இவற்றைஆறுபாடசாலைகளில் மூன்று பாடசாலைகளான ஆண்டி முனை தமிழ் வித்தியாலயம், பத்துலுஓயா சிங்கள பாடசாலை மற்றும் தாராவில்லு முஸ்லிம் வித்தியாலயம் என்பவற்றிக்கு இரண்டாம் கட்ட நிதியாக தலா 13 இலட்சம் ரூபாய் இன்று வழங்கப் படவுள்ளது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், பொதுஜன பெரமுன முன்னணியின் புத்தளம் மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான அமைப்பாளருமான ஏ.எச்.எம். றியாஸ் விடுத்த வேண்டுகோளுக் கிணங்க கொழும்பு சயிதா பவுண் டேஷன்அமைப்பின்பணிப்பாளரும், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நெளஸர் பௌசி மேற்படி நிதியை வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சயிதா பவுண்டேஷன் அமைப்பின் பணிப்பாளரும், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸி, மற்றும் சனத் நிசாந்த பெரேராவின் பாரியாரும், சட்டத்தரணியுமானசாமரிபிரியங்கா ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

## பாடசாலை மாணவர்களுக்கு

# வீதிப் போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் சீருடை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்குவீதிபோக்குவரத்து பாதுகாப்பு சீருடைகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் வீதி போக்குவரத்து பொலிஸாருடன் இணைந்து வீதியினை கடக்கும் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் மாணவர்களுக்கே இச் சீருடைகள் வழங்கப்பட்டன.

இன்னும்ஒருமாதகாலத்திற்குள் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் முன்னால் வீதித்தடைகளையும் ஏற்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளினூடாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆளுநர் உறுதியளித்தார்.

# கட்சிக்குள் இருந்து கட்சியை அழிக்கும் செயல்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி

## கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் உதுமா லெப்பை தெரிவிப்பு



(கே.எ.ஹமீட்)

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கட்டமைப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர், கட்சிக்குள் இருந்துகட்சியைஅழிக்கும்செயல்களுக்குமுற்றுப்புள்ளி வைக்கப்படும். கட்சிவிசுவாசம்என்பதுமிகமுக்கியமான விடயமாகும் நாம் இருக்கும் கட்சிக்கு விசுவாசமாக செயல்பட வேண்டுமென அட்டாளைச்சேனை - 15 (தைக்கா நகரில்) சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புணரமைப்பு கூட்டம் தைக்கா நகர் வட்டார வேட்பாளர் எம்.ஜே.எம் அன்வர் நௌஷாத் அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம் எஸ் உதுமாலப்பை தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் கட்சி என்ற ரீதியில் நாம் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும்போது எதிரிகளை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆனால்கட்சிக்குள்இருந்துகொண்டுகட்சியைஅழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை அடையாளம் காண்பதற்கு காலம் எடுக்கின்றது. நாம் விசுவாசமாக செயற்பட்டுநமது கட்சியை வளர்த்து பலப்படுத்தும்நல்ல செயற்பாடுகளை முன்னெடுக்காமல், நமது கட்சியை சேர்ந்த நீண்ட கால அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கட்சி பிரமுகர்களை மாற்றுக் கட்சி வேட்பாளர்களாக சேர்த்து தேர்தலில் போட்டியிட வைத்துள்ள நிகழ்வு நம் கண் முன்னே நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வு குறித்து கட்சிக்காரர் என்று ரீதியில் நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளினால் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு 80 வீதமானஆதரவுவழங்கிய சில பிரதேசங்களில் இன்று 60 வீதமான ஆதரவு வழங்கப்படும் நிலைமைஏற்பட்டுள்ளது. இந் நிலைமையை ஏற்படுத்தியவர்கள் எமது கட்சிக்குள் இன்றும் இருந்து செயற்பட்டு கொண்டிருக்கின்றார்கள்.

கட்சியின் கிராம மட்ட கட்டமைப்புகள் உயி ரோட்டம் உள்ள தாக மாற்றும் போது இவ்வாறான செயற் பாடுகளை கிராம மட்டத்தில் இயங்கும் கட்சி கட்டமைப்பும், கட்சி போராளிகளும் இணங்காண்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுகிறது. எனவே கட்சியின் கிராம மட்ட செயற்பாடுகளில் கட்சி முக்கியஸ்தர்கள்உயிரோட்டமாகச்செயற்படவேண்டும். கட்சிக் கட்டமைப்புகள் உயிரோட்டம் உள்ளதாக அமைக்கப்பட்ட பின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் கட்சியின் தேசியத் தலைவரால் மத்திய குழுக்கள் புனரமைப்புவேலைத்திட்டம்முன்னெடுக்கப்படவுள்ளது. நாம் எல்லோரும் கட்சியின் செயற்பாடுகளில் 'மசூரா' அடிப்படையில் கலந்துரையாடி தீர்மானத்தை எடுக்க வேண்டும் அவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது கட்சியின் செயற்பாடுகள் சிறந்ததாக அமையும்.

கலந்துரையாடப்படாமல் எடுக்கப்படும் தீர்மானங்களும், செயற்பாடுகளும் பிரச்சினைகளை உருவாக்குகிறது என்றயதார்த்தத்தில் நாம் எல்லோரும் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் முன்மாதிரியானமுஸ்லிம்காங்கிரஸ்மத்தியகுழுக்களை எல்லோரினது ஒத்துழைப்பு, ஆலோசனைகளை பெற்று அமைப்பதற்கான விசேட திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம் என தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், மாவட்ட குழுவின் செயலாளரும்,முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், அட்டாளைச்சேனை மத்திய குழு தலைவர் எஸ்.எல். ஹலீம், அட்டாளைச்சேனைபிரதேசசபையின்முன்னாள் தவிசாளர் ஏ.பி.எம்.ஏ.காதர், அட்டாளைச்சேனை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல். நசீர் மற்றும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

# குளிரூட்டப்பட்ட பேருந்துகள் கிழக்கு உள்ளூர் சேவையில்

## ஆளுநர் தொடக்கி வைத்தார்





(கே.எ.ஹமீட்)

வெப்பநிலை அதிகரிப்பைக் கருத்தில்கொண்டுமுதன்முறையாக கிழக்கு மாகாணத்தில் உள்ளூர் போக்குவரத்திற்காகக்குளிரூட்டப்பட்ட பேருந்துகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.பொதுமக்களின்வசதியான பயணத்திற்காக உள்ளூர் சேவைக் காக குளிரூட்டப்பட்ட பேருந்து களுக்கு போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களும் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

# கதிர்காமம் யாத்திரிகருக்கான நலன் உதவித் திட்டக் கூட்டம்

## காடுகளில் சட்ட திட்டங்கள் கடுமையாக்கப்படும்



(-எஸ்.கார்த்திகேசு)

கதிர்காமம் திருத்தலத்திற்காக உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இருந்து கூமுனை காட்டுவழிப் பாதையூடாகக் கதிர்காமம் செல்லும் தல யாத்திரியர்களுக்கான விசேட பாதுகாப்பு மற்றும் நலனுதவி செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் ஆலையடிவேம்பில் இடம்பெற்றது.

இந்துசமயகலாசாரஅலுவல்கள்திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் கு.ஜெயராஜின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பி சுவாமி விபுலானந்தர் சிறுவர் இல்ல கேட்போர் கூடத்தில் கூட்டம் இடம்பெற்றது.

இம்முறை கதிர்காமம் பாத யாத்திரியர்களின் பாதுகாப்பு மற்றும் குடிநீர் விநியோகம் உள்ளீட்ட பலவேறு நலனுதவி செயற்பாடுகள் தொடர்பாக கதிர்காம பாத யாத்திரியர்ளுக்கான சேவைகளை முன்னெடுத்து வரும் தொண்டு நிறுவன பணியாளர்களுடன் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை,இம்முறைபாதயாத்திரியர்களுக்கான நாட்கள்மட்டுப்படுத்தப்படவுள்ளதுடன்வனவிலங்கள் பாதிக்கும் வகையில் ஒலி எழுப்புதல், பொலித்தீன் பாவனைகள் மற்றும் மரங்கள் வெட்டுதல், தீ வைத்தல் போன்ற செயற்பாடுகளை தடுக்கும் வகையில் பல்வேறு சட்ட நடவடிக்கைகள் துறைசார் அரச திணைக்கள அதிகாரிகளால் கடுமையாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர் வே.ஜெகதீசன், திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் லாகுகல பிரதேச செயலாளர் நவநீதராஜா மற்றும் மாவட்ட பிரதேச இந்துசமய கலாசார அலவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இருந்தனர்.

# ஓய்வுபெற்றார் ஆசிரியை ரஸீதா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியையாகவும் பகுதித் தலைவியாகவும் கடமையாற்றிய திருமதி றஸீதா அப்துல் நாபித் தமது 36 வருட ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

அவருக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்துகொண்டனர்.

# மறைந்த ம.கா.ஈழவேந்தனுக்கு திருமலையில் நேற்று அஞ்சலி

(ஹஸ்பர் ஏ.எச்)

கனடாவில் மறைந்த முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ம.கா.ஈழவேந்தனின் நினைவஞ்சலி நேற்றுதிருகோணமலைமாவட்டத்தின் வெருகல் சீனன் வெளி விநாயகர் கோயிலில் இடம் பெற்றது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலைமாவட்டஅமைப்பாளர் சண்முகம் குகதாசன் தலைமையில் இடம்பெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கட்சியின் முன்னால் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் தொண்டர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கனடாவில்மறைந்தமுன்னால்நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனை நினைவுகூரும்வகையில்மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

# தமிழ் வேட்பாளரை நிறுத்தினாலும் விட்டாலும் சிங்கள வேட்பாளர் ஒருவரேதான் ஜனாதிபதி

## ஈச்சிலம்பற்றில் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தினால் என்ன நிறுத்தாவிட்டால் என்ன சிங்கள வேட்பாளர் ஒருவர்தான் ஜனாதிபதியாக முடியும், தமிழர் வரமுடியாது என இலங்கை தமிழ் அரசு கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

திருகோணமலை ஈச்சிலம்பற்று பகுதியில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்த அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் மே 19 வவுனியாவில் இடம் பெறவுள்ளது. அதில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் ஆராய்ந்தும் ஆலோசனைகளைப் பெற்றும் முடிவுகளை எடுப்போம்.

மாவட்டக்கிளை,மத்தியசெயற்குழுஆகியவற்றில் ஆராய்ந்து அந்த முடிவுகளை எடுக்கலாம். கட்சி நிலவரங்கள் மற்றும் மக்களுடைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பிலும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் கட்சித் தொண்டர்களுடனும் முன்னை நாள் பிரதேச சபை உறுப்பினர்களுடனும் கலந்துரையாடலை ஆரம்பித்து மகிழ்ச்சிகரமாக முடிவு செய்துள்ளோம் என்றார்.

# முஸ்லிம் வாலிப முன்னணி ஸ்தாபகர் தின நிகழ்வு நேற்று





(எம். எப். றிபாஸ்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தினம் முன்னணியின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஒலுவில் கிறீன்வாசல் ஹோட்டலில் நேற்று நடைபெற்றது

மாவட்ட நிறைவேற்றுப் பணிப்பாளரும், முன்னாள் தேசிய தலைவருமானஎம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு அமைப்பின் மாவட்ட ஆலோசகர்கள்,முன்னாள்தலைவர்கள், உறுப்பினர்கள், கல்வியலாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியில் கடந்த காலங்களில் பல்வேறு பணிகளாற்றிய சமூக சேவையாளர்களுக்கு நினைவுச் சின்னங்களும்,பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

# குருநாகல், இலுப்பிடியவத்த மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

## வடமேல் மாகாண ஆளுநர் நடவடிக்கை



(எம்.எம்.ஜெஸ்மின்)

குருநாகல் அஸ்வெத்தும இலுப்பிட்டியவத்த மக்கள் எதிர்கொண்ட குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு வடமேல் மாகாண ஆளுநரால் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் அஸ்வெத்தும இலுப்பிட்டியவத்த குருநாகல் அஸ்வெத்தும விகாரை விகாராதிபதி ஆனந்தஹிமி,முன்னாள்உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் மொஹமட் முஸீன், போன்றோர்களினால் வட மேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டிடம் இந்தப் பிரச்சினை முன்வைக்கப்பட்டது.

குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க ஆளுநர் நஸீர் அஹமட் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இதானல் அஸ்வெத்தும, இலுப்பிட்டியவத்த மக்களின் நீண்ட நாள் பிரச்சினையான குடிதண்ணீர்த் தட்டுப்பாடு தீர்க்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## நிதி ஒதுக்கீடு

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச சபை மற்றும் காரைதீவு பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள மாளிகைக்காடு பிரதேச பொது நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் மூலம் ஒதுக்கப் பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்கான ஆவணம் இன்று மாளிகைக்காட்டில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் அலுவலக தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கான ஆவணத்தை அமைப்பின் தலைவர் ஏ.எல். அன்வரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அல்–ஹுசைன் வித்தியாலயத்தில் வைத்து கையளித்தார்.

## மேலங்கி அறிமுக நிகழ்வு

(கே எ ஹமீட்)

சிறீ லங்கா ஜனாஜ சுகாதார சேவைகள் அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை சங்கக் கிளையின் மேலங்கி அறிமுக நிகழ்வு சனிக்கிழமை கிளினிக் மண்டபத்தில் கிழக்கு மாகாண கிளைச்சங்கதலைவர் எஸ்.எ.உமீரின் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக வைத்திய அத்தியாயத்தில் கலாநிதி எ.எல்.எப்.ரகுமான் கலந்துகொண்டார்.

அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சங்க உறுப்பினர்களுக்கு தர முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பாளர் டாக்டர் எ.ஆர்.எம்.ஹாரிஸ் காரணங்களினால் உத்தியோகபூர்வ மேலங்கி வழங்கி வைக்கப்பட்டது.

## கிண்ணியா தலைவர்கள் குறித்த நூல் வெளியீடு

(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியாவை ஆண்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் எனும் தலைப்பின் கீழ் நூல் வெளியீடு நேற்றுக் காலை 9 மணிக்கு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகரும் மற்றும் இலக்கியவாதியுமான எம் எச் ஏ. ஹசன் எழுதிய நூலே இவ்வாறு வெளி யிடப்பட்டது.

எம் எச் ஏ. ஹசன் தலைமையின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப், கிழக்கு மாகாண சபையின் பிரதி பிரதம திட்டமிட பணிப்பாளர் கலாநிதி ந.தமிழ்ச்செல்வன், உள்ளூராட்சிமன்ற முன்னாள் தலைவர்கள், மூதூர் வலக்கல்விப் பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள் இலக்கியவாதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின் தலைமை உரையினை கிண்ணியா பொது நூலகத்தின் முன்னாள் நூலகர் எம் எஸ் எம்.சபருல்லாஹ் கான் நிகழ்த்தினார். நூல் ஆய்வினை ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.நியாஸ் வழங்கினார்.

இந்த நிகழ்வில் பலர் கலந்துகொண்டதோடு, வருகை தந்தவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் நூலாசிரியரும் நூலினை வழங்கி வைத்தனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.05.2024இல் வெளியிடப்பெற்றது